# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 ஜீன் மாதம் 28–ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்–01**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்யப்பட்டு 07.01.2018 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி தெற்குபுறம் உள்ள 6 கடைகள் கழிவுநீர் கால்வாய் மீது அமைக்கப்பட்டு, பழுதடைந்த நிலையிலும், கால்வாயினை தூர்வார இயலாத நிலையிலும் இருந்ததனால் மன்ற அனுமதி எண் 272/2018 மூலம் அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, புதியதாக 7 கடைகள் கட்டப்பட்டன. பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு அருகில் வடக்கு புறம் புதியதாக 3 கடைகளும், கட்டப்பட்டு மொத்தம் 10 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டி முடிக்கப்பட்ட 10 கடைகளுக்கும் பொறியாளர் பிரிவின் மூலம் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு, கடைகள் கட்டுமான பணி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது என சான்றளிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்காணும் 10 கடைகளுக்கும் பொறியியல் பிரிவு மற்றும் குழுக்கள் மூலம் வழிகாட்டி மதிப்பு, மார்க்கட் மதிப்பு, ஆகியவை நிர்ணயம் செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. விபரம் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | கடைகள் | மார்க்கட் மதிப்பு | நகராட்சி பொறியாளரின் கணக்கீட்டு தாள் மதிப்பீடு | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு பகுதியில் உள்ள 7 கடைகள் (77 ச.அடி) | 3000 | 5250 | 5250 (கடை ஒன்றுக்கு) |
| 2 | வடக்கு பகுதியில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறை அருகில் உள்ள 2 கடைகள் | 3000 | 3800 | 3800 (கடை ஒன்றுக்கு) |
| 3 | வடக்கு பகுதியில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறை அருகில் உள்ள 1 கடை (87 ச.அடி) | 3000 | 5600 | 5600( கடை ஒன்றுக்கு) |

அலுவலகக் குறிப்பு
மார்க்கட் மதிப்பு, பொதுப்பணித்துறை மதிப்பு இவற்றில் எது அதிகமோ அதை வாடகையாக நிர்ணயம் செய்து அதன்மீது ஏலம் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கலாம்.
ந.க.எண் 1875/அ1/2018

**பொருள் எண்–02**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 32 U 8542க்கு டயர்கள் மற்றும் டியூப்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாலும், அடிக்கடி பஞ்சர் ஆகி விடுவதாலும், நகரத்தில் குப்பைகள் அள்ள சிரமமாக உள்ளது. எனவே, பொது மக்களின் நலன்கருதி 6 எண்ணிக்கையில் புதிய டயர்களை வாங்கிக் கொள்ள விலைப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.55000/–னை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வாகனத்தின் டயர்களை மாற்றுவதற்கான உத்தேச செலவினம் ரூ.55000/–த்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1139/எச்1/2018

**பொருள் எண்–03**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN 15 Y 6671 132000 கி.மீ மேல் ஓடி உள்ளதால், வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், 4 வீல் பிரேக் வேலை மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், வாகனத்தின் தயாரிப்பு நிறுவனமான சேலம் S.K.S.ஆட்டோ மொபைல்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினமாக ரூ.25000/– ஆகும். மேற்காணும் தொகையினை நகராட்சி வருவாய் பிரிவிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. வாகன பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1418/எச்1/2018

**பொருள் எண் – 04**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் எண் TN 32 AV 0552க்கு தகுதி சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற TVS Sundaram Iyengar & Sons Private Limited, விழுப்புரம் நிறுவனத்தாரிடம் வாகனத்தினை பழுது நீக்கம் செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–னை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி எதிர்நோக்கி TVS Sundaram Iyengar & Sons Private Limited, விழுப்புரம் நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1188/எச்1/2018

**பொருள் எண் – 05**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்யப்பட்டு 07.01.2018 அன்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி தெற்குபுறம் உள்ள 6 கடைகள் கழிவுநீர் கால்வாய்மீது அமைக்கப்பட்டு, பழுதடைந்த நிலையிலும், கால்வாயினை தூர்வார இயலாத நிலையிலும் இருந்ததனால் மன்ற அனுமதி எண் 276/2018 மூலம் அனுமதி பெற்று, இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, புதியதாக 7 கடைகள் கட்டப்பட்டன. பேருந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு அருகில் வடக்கு புறம் புதியதாக 3 கடைகளும் கட்டப்பட்டு மொத்தம் 10 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டி முடிக்கப்பட்ட 10 கடைகளுக்கும் பொறியாளர் பிரிவின் மூலம் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு, கடைகள் கட்டுமான பணி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது என சான்றளிக்கப்பட்டதனை தொடர்ந்து மேற்காணும் 10 கடைகளையும் பொது ஏலம் நடத்தி கடைகளை ஒப்படைக்க கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | ஏல இனஙகளின் விபரம் | 01.01.2018க்கு பிறகு பெறப்பட்ட சொத்து அசல் மதிப்பு சான்று | அசல் மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய வைப்பு தொகை | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு பகுதியில் உள்ள 7 கடைகள் | 200000 | 75000 | 150000 |
| 2 | வடக்கு பகுதியில் தார்மார்கள் பாலூட்டும் அறை அருகில் உள்ள 2 கடைகள் | 200000 | 75000 | 150000 |
| 3 | வடக்கு பகுதியில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறை அருகில் உள்ள 1 கடை | 200000 | 75000 | 150000 |

மேற்கண்டவாறு கடைகளுக்கு வைப்புத்தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. பொது ஏலம் நடத்துவதற்கான விளம்பரத்தினை தினசரி நாளிதழில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் தொடர்பு மற்றும் செய்தி அலுவலர் அவர்களின் மூலம் வெளியிடவும், அதற்கான செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1875/2018/அ1

**பொருள் எண் – 06**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்வது குறித்த விளம்பரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு குறித்து நகர்மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சொத்துவரி திருத்தம் குறித்த அறிக்கையினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கான கட்டணம் ரூ.2100/–யை செலுத்த கோரி கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் அவர்களிடத்திலிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இத்தொகையினை இந்நகராட்சி வருவாய் உதவியாளர் திரு கா.ராஜீ அவர்கள் செலுத்தியதையும் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் 708/2018/அ2

**பொருள் எண் – 07**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள கிராம புல எண் 132/15 பகுதி, 133/1ஏ, 134/3, 134/3–ல் அமைந்துள்ள அனுமதியற்ற சரஸ்வதி நகர் மனைப்பிரிவில் உள்ள 62 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 307/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

**பொருள் எண் – 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 150/1, 151/8–ல் அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீஅய்யப்பா நகர் மனைப்பிரிவில் உள்ள 62 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 310/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

**பொருள் எண் – 09**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள் வாங்கி கொள்ள ரூ.2.50 இலட்சத்துக்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 98 நாள் 28.06.2017ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டது. தற்போது 2017–2018ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் வாங்கியமைக்கு பட்டியல் தொகை ரூ.411131/– வரப்பெற்று உள்ளதால் கூடுதலாக ரூ.2,50,000/–க்கு மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கூடுதலாக ஏற்பட்டுள்ள பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்      /2018/இ1

**பொருள் எண் – 10**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழக முதல்வர் உயர்திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தமிழக முதல்வராக பதிவியேற்று ஒரு முடிவு பெற்றமைக்கு ஓராண்டு சாதனை மலர் வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியின் வழியே மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்ட பணிகள் குறித்து தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.21000/– வழங்க கோரி வரப்பெற்ற அரசும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் – 11**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் குப்பை அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டுவரும் லாரி எண் TN32U8542 என்ற வாகனத்திற்கு புதியதாக 6 டயர்கள் (ம) டியூப்புகள் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோர தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைபுள்ளிகோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பாத்திமா டயர் வேல்ட் துருகம் ரோடு கள்ளக்குறிச்சி | 50900/– |
| 2. | சிவசக்தி டயர்ஸ் கள்ளக்குறிச்சி | 53400/– |
| 3. | சண்முகா டயர்ஸ் கள்ளக்குறிச்சி | 53200/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான **வரிசை எண் 1ல் வழங்கியுள்ள பாத்திமா டயர் வேல்ட் துருகம் ரோடு கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தினைவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று **பாத்திமா டயர் வேல்ட் துருகம் ரோடு கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தினைவருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   ந,க,எண் 1169/எச்1/2018

**பொருள் எண்–12**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு, **நாடாளுமன்ற உறு□□ன□தொகுனி மே□பாட்டு ஙிட்ட□ 2016-2017-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 19.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | Supply of R.O. Plant 500 LPH with Membranes 2 No, Stainless Steel Tank in Government District Headquarters Hospital, Kallakurchi | ரூ. 5,00,000/- | M/s. HYDROA TECH., 276- Perumal Koil Street, Malaikottalam, Kallakurichi | 0.51 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. PRIYA RO SYSTEMS, Sundara Vinayagar Koil Street, Kallakurichi | 6.09 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், **0.51%** மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"M/s. HYDROA TECH."** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1084 / 2018 / இ1)**

## பொருள் எண்–13

அரசானை (நிலை) எண் 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999ல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில் வரியில் 25%திற்கு குறையாமலும் 35% மிகாமலும் நகர் மன்றத்தால் திருத்தி அமைக்கபட வேண்டும் அவ்வாறு இந்நகர் மன்ற தீர்மான எண் 270/2018 நாள் 28.05.2018ன்படி திருத்தி அமைக்கப்பட்ட தொழில்வரி அட்டவணையை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அலுவலர் விழுப்புரம் அவர்களின் மூலமாக மாவட்ட அளவில் தினமலர் தினசரி நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்த வகையில் பட்டியல் ரூ.7560/– வரப்பெற்ற இத்தொகையினைஇந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்1209/2018/அ1

## பொருள் எண்–14

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள தெருவோர வியாபாரிகளை கணக்கெடுக்கும் பணி நிறைவுற்று நகர விற்பனை குழு அமைப்பதற்கு தெருவோர வியாபாரிகளிலுருந்து 6 நபர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்பட உள்ளதை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யுமாறு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அலுவலர் மாவட்ட ஆட்சியர்ரகம் விழுப்புரம் அவர்களக்கு கடிதம் அனுப்பப்பட்டது. எனவே மேற்படி செய்தியினை தினத்தந்தி நாளிதழில் 21.12.2016 அன்று விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.3468/– ஐ வழங்ககோரி ADWAVE ADVERTISING PRIVATE LIMITED CHENNAI என்ற நிறுவனத்தார் கடிதம் அனுப்பியுள்ளார். மேற்காணும் கடிதம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
3. ந,க,எண்.எப்1/2954/2016

## பொருள் எண்–15

இந்நகராட்சி பொதுசுகாதாரம் மற்றும் தெருமின் விளக்கு பணிகளுக்கு பயன்படுத்தி வரும் வாகனங்களுக்கு GPS கருயீவ பொருத்துவதற்கு இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 268/2018 நாள் 30.05.2018ல் மன்ற முன்அனுமதி பெற்று அதன்படி 03.05.2018ல் தேதியன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Moot Rack GPS System Chennai | 5250+900=6150 |
| 2. | Concok GPS Chennai | 6250+1700=7950 |
| 3. | Airfly Software Chennai | 6500+1800=8300 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான **வரிசை எண் 1ல் வழங்கியுள்ள Moot Rack GPS System Chennai என்**ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தினைவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று **Moot Rack GPS System Chennai** என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தினைவருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந,க,எண் 1169/எச்1/2018

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**